## *13*

# பூமியில் அடித்தளமிடப்பட்டது, ஆனால் பரலோகத்தில் கட்டப்பட்டது

## [பிலிப்பியர் 3:17–4:1]

*இந்த வேளையில் நீங்கள் எங்கிருக்கிறீர்கள் - ஒரு கட்டிடத்திற்குள்ளா அல்லது வெளியிலா? நீங்கள் எங்கிருந்தாலும், சுற்றிலும் கண்ணோக்கச் சற்றே நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் காண்பது என்ன? இப்போது உங்கள் கையினால் ஏதேனும் ஒரு பொருளைத் தொட்டுப்பாருங்கள். ஒருவேளை நீங்கள் ஒருதட்டுமுட்டுப் பொருளைத் தொட்டிருக்கலாம். நீங்கள் வெளியே இருந்தால், ஒருவேளை நீங்கள் புல்லை அல்லது வெறும்தரையைத் தொட்டிருக்கலாம். இது நமது ஐம்புலன்களால் நான் அனுபவித்து உணரக்கூடிய உலகமாக உள்ளது. இந்த உலகத்திற்கு நாம் நன்கு பழக்கமாகி இருக்கிறோம். இந்த உலகம் தன்னில் குடியிருப்பவர்களில் பெரும்பான்மையானவர்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டதாக உள்ளது. இருப்பினும் இந்த உலகம் தற்காலிகமானதுதான். இது கர்த்தர் மறுபடியும் வரும்போது ஒழிந்துபோய்விடும் என்பதைக் கிறிஸ்தவர் அறிகிறார் (2 பேதுரு 3:4, 9, 10). அவர் [கிறிஸ்தவர்]* பரலோகமே *தமது நிரந்தரமான இல்லமாக உள்ளது - மற்றும் தமது பட்சமானது அதை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் - என்பதை அறிகிறார்.*

*நாம் ஏற்கனவே "கிறிஸ்து இயேசுவுக்குள்* தேவன் அழைத்த பரம அழைப்பின் *பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்ற பவுலின் கூற்றைப் பற்றிக் கலந்துரையாடினோம் (பிலிப்பியர் 3:14; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஜேம்ஸ் டோல் என்பவர் இதை, "பரலோகத்தி*லிருந்து* மற்றும் பரலோகத்*திற்கு* வரும்" அழைப்பு என்று குறிப்பிட்டார்.[1] இந்தப் பாடத்தில், "பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறவர்கள்" (3:19) மற்றும் "குடியிருப்பைப் பரலோகத்தில் கொண்டுள்ள, இயேசுவின் மறுவருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற" வர்கள் (3:20) ஆகியோருக்கு இடையில் ஒரு நேரெதிர் ஒப்பீடு ஏற்படுத்தப்படும்.*

*நாம் எதிர்கொள்ளும் மாபெரும் அறைகூவல்களில் ஒன்று, அதேவேளையில், பூமியில் அடித்தளம் இடப்பட்டதாகவும் ஆனால் பரலோகத்தில் கட்டப்பட்டதாகவும் உள்ளது - "இந்த உலகத்தில் இருக்கிறோம்" (யோவான் 17:11) ஆனால் "இந்த உலகத்தாரல்ல" (யோவான் 17:16). இங்கே மற்றும் இப்போது என்பதற்கும் அங்கே மற்றும் அப்போது என்பதற்கும் இடையில் நிலையான இறுக்கம் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டிய*

ஒரு கேள்வி பின்வருமாறு: "எனது மனம் பூமிக்கு உரியவற்றிலா அல்லது பரலோகத்திற்கு உரியவற்றிலா, எதில் நிலைகொண்டுள்ளது?"

## ஒப்புக்கொள்ள வேண்டிய முன்மாதிரி (3:17)

3ம் அதிகாரத்தில் பவுலின் முந்திய புத்திகூறுதல்கள், பிலிப்பி நகரின் சபையில் இருந்த தனித்தனி உறுப்பினர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படக் கூடும். 17ம் வசனத்தில் அப்போஸ்தலர் தமது கவனத்தை, முழு சபையையும் நோக்கித் திருப்பினார். ஆங்கிலத்தில் இவ்வசனம், "*Brethren, join in following my example ...*" என்று தொடங்குகிறது. தமிழில் இது, "சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி" என்று தொடங்குகிறது. கிரேக்க மொழியில் இவ்வசனம், "உடன்" (*sun*[2] என்ற) முன்னிடைச் சொல்லை "போலச் செய்பவர்" என்பதற்கான (*mimetes* என்ற) வார்த்தைக்கு முன்னதாகக் கொண்டுள்ள கூட்டுவார்த்தையான *summimetes* என்பதன் பன்மை வடிவத்தைக் கொண்டு தொடங்குகிறது. "உடன்" என்று அர்த்தம் தரும் முன்னிடைச் சொல்லானது, இது கிறிஸ்தவர்கள் ஒன்று கூடிச் செய்ய வேண்டிய விஷயமாயிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. ஆகவே *NASB* வேதாகமத்தில் "*join in*" என்றுள்ளது.

### பவுலின் உதாரணம்

எதில் சேர்ந்து கொள்ள வேண்டும்? ஒருசில பிரசங்கியார்களுக்கே பவுலின் ஆணையைத் தர துணிச்சல் இருக்கும்: "... என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி." நேரடியான அர்த்தத்தில் பவுல், "என்னைப் போன்று செயல்படுகிறவர்களாக இருங்கள்" என்று கூறினார். நான் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறேன் மற்றும் நான் ஒருக்காலும் எந்த விஷயத்திலும் என்னைப் போன்று செய்ய வேண்டும் என்று எனது உரையைக் கேட்பவர்களிடத்தில் வேண்டிக்கொண்டதில்லை.

பவுல் தன்முனைப்புக் கொண்டவராக இருந்தாரா? இல்லை, அவர் தாம் எல்லாவற்றிலும் இருக்க வேண்டிய பிரகாரம் இருந்ததில்லை என்பதைத் தெளிவாக அறிந்திருந்தார் (3:12, 13). அனேகமாக அவர், தமது வார்த்தைகளுக்குத் தகுதிப்படுத்துதல் அவசியம் என்பதைத் தமது வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என்று யூகித்திருக்கலாம். இதேபோன்ற கட்டளையொன்றைக் கொரிந்தியர்களுக்கு அவர் கொடுத்தபோது, அவர் தமது வார்த்தைகளைப் பின்வருவது போன்று தகுதிப்படுத்தினார்: "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (1 கொரிந்தியர் 11:1; காண்க 1 தெசலோனிக்கேயர் 1:6). பிலிப்பியர் 3:17ல் தகுதியானது சந்தர்ப்பப் பொருளில் இருந்து எடுக்கப்பட வேண்டியதாக உள்ளது. பவுல் தமது வாழ்வின் வலியுறுத்தம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு கிறிஸ்துவைப் போன்று முக்கியமான விஷயமாக வேறு எதுவும் இருக்கவில்லை (3:4-11). அவர் பின்னானவற்றை மறந்து முன்னானவற்றை நோக்கித் தொடர்ந்து கொண்டிருந்தார் (3:12-14). அவர் தமது வாசகர்கள் மனதில் இதே நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார் (3:15, 16). 17ம் வசனம் அந்தப் புத்திமதியின் விரிவாக்கமாக உள்ளது. செயல்விளைவில் பவுல், "நான் இயேசுவிடமும் வாழ்விடமும் கொண்டுள்ள எண்ணப்போக்கைப் பின்பற்றுங்கள். பரலோக இலக்கின் மீது உங்கள் கண்களை வையுங்கள்" என்று

*சொல்லிக் கொண்டிருந்தார்!*

## *சக கிறிஸ்தவர்களின் உதாரணங்கள்*

*ஏதேனும் ஒரு விஷயத்தை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்கு, அதை நாம் காண வேண்டும். பவுல் தாம் எப்போது திரும்பவும் பிலிப்பியர்களுடன் இருப்பார் என்பது பற்றி நிச்சயமற்றவராக இருந்தார் (காண்க 1:27), எனவே அவர் தமது புத்திகூறுதலை விரிவாக்கினார்: "நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" (3:17ஆ). பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில், "நடத்தல்" என்ற வார்த்தை "வாழ" என்ற கருத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது (காண்க சங்கீதம் 1:1; 1 யோவான் 1:7). பிலிப்பி நகருக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்த எப்பாப்பிரோதீத்து (2:25), விரைவில் அங்கு செல்லவிருந்த தீமோத்தேயு (2:19) ஆகியோர் பின்பற்றத் தகுதி யானவர்களில் உள்ளடங்கியிருந்தனர். பிலிப்பி நகரில் இருந்த பக்குவம் வாய்ந்த எந்தக் கிறிஸ்தவர்களும் (காண்க 3:15) நல்ல உதாரணங்களாகச் செயல்பட்டிருக்க முடியும்.*

*3:17ம் வசனத்தில் உள்ள இரண்டு வார்த்தைகளுக்குக் கூடுதல் விளக்கம் தேவைப்படுகிறது. முதலாவது, "நோக்குங்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையாக உள்ளது (இது skopeo என்பதன் ஒரு வடிவமாகும்). இது 14ம் வசனத்தில் "இலக்கு" என்று தரவழைக்கப்பட்டுள்ள வார்த்தையின் வினைவடிவமாக உள்ளது. "இலக்கு" என்பது* காணப்படுவதாக *உள்ள ஒன்றிற்கான குறிப்பு ஆகும்; ஒரு ஓட்டப்பந்தய வீரர் தமது கண்களை நிலைநிறுத்தியுள்ள முடிவுக்கோடு என்பதே உருவகமாக உள்ளது. பவுல் பயன்படுத்திய வார்த்தை காணுதலின் கருத்தையும் கொண்டுள்ளது: இது, "காண, கவனிக்க மற்றும் அக்கறையுடன் பார்க்க" என்று அர்த்தப்படுகிறது.[3] அவர் இந்தச் சொற்றொடரை ரோமர் 16:17ல் ஒரு எதிர்மறை அமைவில் பயன்படுத்தினார் ("குறித்து"), ஆனால் இங்கு அவர் இதை ஒரு நேர்மறைக் கருத்தில் பயன்படுத்தினார். துரதிர்ஷ்டவசமாக நம்மில் சிலர், நல்ல உதாரணங்களைக் கவனிப்பதைக் காட்டிலும் மோசமான உதாரணங்களை கவனிப்பதில் அதிக விருப்பம் கொண்டுள்ளனர். அப்போஸ்தலரின் வாசகர்கள் தங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களைப் போலச்செய்வதற்கு அவர்களை, "தொடர்ந்து நோக்கும்படி"[4] கூறப்பட்டனர்.*

*"மாதிரி" என்பது இரண்டாவது முறை கண்ணோக்க வேண்டிய இன்னொரு வார்த்தையாக உள்ளது. "மாதிரி" என்பது tupon என்ற வார்த்தையின் - மொழிபெயர்ப்பாக உள்ளது. இது tupos என்பதன் - ஒரு வடிவமாக உள்ளது, இதிலிருந்தே நாம் "type" என்பதைப் பெறுகிறோம். இவ்வார்த்தை ஒரு கட்டிடத்தின் மாதிரியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (எபிரெயர் 8:5). இது உபதேச மாதிரியைக் குறிக்கவும் (ரோமர் 6:17) மற்றும் ஒழுக்கமுறை மாதிரிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது (காண்க 1 கொரிந்தியர் 10:6, 11; 1 தெசலோனிக்கேயர் 1:7). புதிய ஏற்பாடு, இன்றைய நாட்களில் சபைக்கான தேவனுடைய மாதிரியைக் கொண்டுள்ளது: நாம் எவற்றை விசுவாசிக்க வேண்டும், செய்ய வேண்டும் மற்றும் போதிக்க வேண்டும் என்பவை அதில் அடங்கியுள்ளன. நாம், "மாதிரியின்படியே எல்லாவற்றையும் செய்ய" கற்றுக்கொள்வோமாக (காண்க எபிரெயர் 8:5).*

பிலிப்பியர் 3:17ம் வசனம் நல்ல உதாரணங்களைக் கொண்டிருத்தலின் - மற்றும் நல்ல உதாரணங்களாக இருப்பதின் - முக்கியத்துவத்தை அழுத்தமாக கூறுகிறது. நாம் பிறரைப் பார்த்து அவர்களைப் போன்றே செய்பவர்களாகப் பிறந்திருக்கிறோம். தனது தாயின் உடையை அணிந்து கொள்ளும் சிறுபெண்ணை அல்லது தனது பாதங்களைத் தனது தந்தையின் கால்தடங்களில் வைக்கையில் தனது கால்களை அகற்றி விரித்து வைக்கும் இளம் பையனைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். நம்முடைய இன்றைய நாட்களின் திறமைகளில் பல - எவ்வாறு சமைப்பது, எவ்வாறு உழுவது அல்லது எவ்வாறு சிலவற்றைக் கட்டுவது போன்றவை - போலச் செய்வதினாலேயே கற்கப்பட்டன.[5] நமது ஆவிக்குரிய வாழ்வைப் பொறுத்த மட்டில், சகோதரர்கள் தேவனுடைய கட்டளைகளை எவ்வாறு செயல்படுத்துகின்றனர் என்று கண்ணோக்குதல் நமக்கு உதவுகிறது. கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டிருக்க வேண்டிய அவசியம் *பற்றி வாசித்தல்* ஒரு விஷயமாக இருக்கையில் (காண்க எபிரெயர் 2:13; 1 தீமோத்தேயு 4:10) நல்ல மற்றும் மோசமான காலங்களில் தேவன் மீது நம்பிக்கை வைத்துள்ள கிறிஸ்தவரை *காணுதல்* என்பது இன்னொரு விஷயமாக உள்ளது.

ஒரு சில பிரசங்கியார்களே "என்னைப் பின்பற்றுங்கள்" என்று கூறத் துணிவாக இருப்பார்கள் என்று நான் முன்னமே உரைத்தேன். அதே வேளையில், கர்த்தருடைய ஊழியக்காரர்கள் யாவருமே, தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவரைப் பார்த்து அவரைப் போலச் செய்யப்படுவார்கள் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இது, நம்மில் தேவனுடைய வசனத்தைப் போதிக்கும் அல்லது பிரசங்கிக்கும் சகோதரர்கள் மீது எவ்வளவு பெரிதான பொறுப்பை வைக்கிறது! (காண்க யாக்கோபு 3:1.) இருப்பினும் இது மக்களுக்கு ஊழியம் செய்பவர்கள் விஷயத்தில் மாத்திரமல்ல, ஆனால் எல்லாக் கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் உண்மையாக உள்ளது (காண்க மத்தேயு 5:13-16). நாம் யாவருமே ஒன்று நல்ல உதாரணங்களாக இருக்கிறோம் அல்லது மோசமான உதாரணங்களாக இருக்கிறோம். வேறு எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்துவை வைத்திருப்பதன் உதாரணங்களாக, மேலான விஷயங்களில் நமது இருதயத்தை அமைத்து வைத்திருப்பவர்களாக இருக்க நாம் பிரயாசப்படுவோமாக. இதுவே இந்தப் பாடத்திற்கான நமது வேதவசனப்பகுதியின் மைய சிந்தனையாக உள்ளது.

## தவிர்க்க வேண்டிய மக்கள் (3:18, 19)

ஒவ்வொரு நல்ல உதாரணத்திற்கு, பல மோசமான உதாரணங்கள் உள்ளன. பெரும்பான்மையான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் யாரைப் பின்பற்றுகின்றனர் என்பது குறித்து அக்கறை கொள்பவர்களாக உள்ளனர். அவ்வாறே, நல்ல உதாரணங்களைப் பின்பற்றித் தாங்களே மாதிரிகளாக இருக்க வேண்டும் என்று பவுல் தமது வாசகர்களுக்குப் புத்திகூறிய பின்பு, செயல் விளைவில் அவர் மோசமான உதாரணங்களை அவர்கள் பின்பற்றக் *கூடாது* என்று எச்சரித்தார்:

> ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு,

*அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் (3:18, 19).*

## குறிப்பிட்ட நடைமுறைப்பயன்பாடு

பவுல் ஒருவேளை, இந்தத் தனிநபர்களைக் குறித்து பிலிப்பியர்களுக்குத் தாம்முன்னதாக அங்கு சென்றிருந்தபோது எச்சரித்து இருக்கலாம் அல்லது முந்திய ஒரு கடிதத்தில் அவர்களை அவர் எச்சரித்து இருக்கலாம் (காண்க பிலிப்பியர் 3:1). இந்தக் குழுவைப்பற்றி அவர்களை அவர் ஏற்கனவே முன்னெச்சரிக்கை செய்திருந்ததால், அவர் தமது சிந்தையில் யாரைப் பற்றிய நினைவைக் கொண்டிருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள் - ஆனால் நாம் அதை அறிவதில்லை. சில எழுத்தாளர்கள், யார் சந்தேகத்திற்கு உரியவர்கள் என்பதை நாம் காணவேண்டுமென்றால், நாம் படித்துக் கொண்டுள்ள இந்த அதிகாரத்தின் முதல் பகுதிக்கு அப்பால் நாம் கண்ணோக்கத் தேவை இல்லை என்று சுட்டிக்காண்பிக்கின்றனர்: அவர்கள், 2ம் வசனத்தில் உள்ள யூதத்துவ போதகர்களே ஆவர். "[யூதத்துவப் போதகர்கள் போதித்தபடி] நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே" என்பதால் (கலாத்தியர் 2:21), இவர்கள் "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்கள்" என்ற நிலையில் உள்ளனர். "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற … யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தார்கள்" என்பதால் (கலாத்தியர் 5:4), அவர்களுடைய முடிவு "அழிவு" என்பதாக இருந்தது. "அவர்களுடைய தேவன் வயிறு" என்ற சொற்றொடர், உணவு தொடர்பாகப் பழைய ஏற்பாட்டில் இருந்த சிக்கலான கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற அவர்களின் வலியுறுத்தத்தைக் குறிப்பிடக்கூடும். "அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே" என்பது அவர்கள் தங்கள் குறைபடுதல்களினால் வெட்கம் அடைந்து இருக்க வேண்டியிருந்தபோது, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் பற்றி அவர்கள் மேன்மை பாராட்டிய விஷயத்திற்கு நடைமுறைப் படுத்தப்படக் கூடும். (விருத்தசேதனம் பற்றிய மறைவான கருத்து ஒன்று, "இலச்சை" என்ற வார்த்தையில் காணப்பட முடியும், இவ்வார்த்தை சிலவேளைகளில் நிர்வாணம் என்ற வார்த்தைக்கு அர்த்தமாகப் பயன்படுத்தப்பட்டது [காண்க மீகா 1:11; நாகூம் 3:5].) இந்த யூதத்துவ போதகர்கள், சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் பற்றி முதன்மையாக வலியுறுத்திக்கொண்டு, "பூமிக்கடுத்தவைகளைச் சிந்தித்தனர்."

மற்ற எழுத்தாளர்கள், பிலிப்பியர் 3:18, 19ன் சொற்றொடராக்கமானது, கிறிஸ்தவராக இருக்கும் ஒருவர் தாம் விரும்பியவாறு வாழமுடியும், அது தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதற்கு முக்கியமானதல்ல என்று போதித்த கள்ளப்போதகர்களுக்குச் சிறப்பாகப் பொருந்துகிறது என்று நம்புகின்றனர்.[6] இப்படிப்பட்டவர்களும் அதேபோன்று, "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக" உள்ளனர், ஏனென்றால் சிலுவை என்பது சுயத்திற்கும் பாவத்திற்கும் மரித்தலின் அடையாளமாக உள்ளது (காண்க மத்தேயு 16:24). "அழிவு" என்பதே அவர்களுடைய முடிவாக இருந்தது, ஏனெனில் "மாம்சத்தின் கிரியைகளை" செயல்படுத்துபவர்கள் "தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" (கலாத்தியர் 5:19-21). "அவர்களின் பசியே"

அவர்களின் "கடவுளாக" இருந்தது, ஏனென்றால் அவர்கள் மாம்சப்பிரகாரமான இச்சைகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர். அவர்கள் தாங்கள் செய்த வெட்கக் கேடான விஷயங்களுக்கு மகிமை செலுத்தினர், மற்றும் அவர்களின் மனங்கள் இந்தப் பூமிக்குரிய விஷயங்களிலே "அமைவு" கொண்டிருந்தன.

பல நபர்கள் கருத்தாகத் தெரிவிக்கப் பட்டுள்ளனர்.[7] அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைப் பற்றி நினைத்தல் கூட பவுலைக் கலங்கச் செய்தது. கிரேக்க வசனத்தில் அவர்களை அவர், "சிலுவையின் பகைஞர்கள்" என்று குறிப்பிட்டார். அவர்களைப் பற்றி அவர் எழுதியபோது, அவர் அழுதார். பிலிப்பியர் 3:18ல் "கண்ணீரோடு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (Gk.: *klaion*) வார்த்தை "அழுகையின் உரத்த வெளிப்பாடு" என்பதைக் குறிக்கிறது.[8] இந்தக் கள்ளப்போதகர்கள் இருந்தனர் மற்றும் இவர்கள் பவுலுக்குப் பிரியமான பிலிப்பியர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தனர் என்ற உண்மை, பவுலின் இருதயத்தை உடையச் செய்தது.

## பொதுவான நடைமுறைப் பயன்பாடு

18 மற்றும் 19ம் வசனங்கள் பற்றிப் பரவலாக வேறுபடும் விளக்கங்களை நான் வாசிக்கையில், இரு சிந்தனைகள் மனதிற்கு வருகின்றன. முதலாவதாக, மதரீதியாக "சட்டத்தை அளவுமீறிக் கடைப்பிடிப்பவர்களில்" (கிறிஸ்தவர்கள் மீது பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களைக் கட்டுவிக்க முயற்சி செய்த யூதப் போதகர்கள்) இருந்து மதரீதியாக (கட்டளைகளைக் கடைப்பிடித்தல் அவசியமற்றது என்று நினைத்த) "சுயாதீனசிந்தை" கொண்டவர்கள் வரையிலும், பட்டியலானது முழுநிறைவாகச் செல்கிறது. பவுலின் விவரிப்பின் இரண்டாவது சிந்தனையானது, ஏறக்குறைய *எந்த* ஒரு தவறான மத அல்லது ஒழுக்கரீதியான இயக்கத்திற்கும் நடைமுறைப் படுத்தப்படக் கூடும். இப்போது நாம் இவ்விரு வசனங்களையும் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தி இன்னொரு முறை கண்ணோக்குவோமாக.

இன்றைய நாட்களில் உள்ள மக்கள் "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக" முடியும் என்பது கவலைக்கு உரியதாக உள்ளது. கிறிஸ்தவத்தில் சிலுவையே மையமானதாக உள்ளது. நாம் "சிலுவையின் மூலமாகத் தேவனோடு" ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறோம் (எபேசியர் 2:16); "... இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 1:18). கொரிந்தியர்களுக்குப் பவுல், "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 2:2). மீண்டும் அவர், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக" என்றும் எழுதினார் (கலாத்தியர் 6:14). நாம், "கிறிஸ்துவின் சிலுவை" பற்றிப் பேசும்போது, அவர் எதன் மீது மரித்தோரோ அந்த மரத்துண்டை நமது சிந்தையில் கொண்டிருப்பதில்லை, ஆனால் சிலுவை எதற்காகவெல்லாம் நிற்கிறதோ அவை எல்லாவற்றையும் நமது சிந்தையில் கொண்டிருக்கிறோம்: தேவன் நமக்காகக் கொண்டிருந்த அன்பு, இயேசுவின் தியாகம், நமது ஆத்துமாக்களின் இரட்சிப்பு, சுய - மறுப்புக்கான அறைகூவல் மற்றும் பிற.

இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பற்றி வேதாகமம் போதிப்பதையும் நமது

இரட்சிப்பை செயல்விளைவாக்க அவர் மரிக்க வேண்டியிருந்ததையும் ஒருவர் விசுவாசிக்காதபோது, அவர் சிலுவைக்குப் பகைஞர் ஆகிறார். மதக்குழுக்களின் போதனையானது சிலுவையை அவசியமற்றதாக ஆக்குகிறபோது, அவைகள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராகின்றன. இது, நல்ல வாழ்வை வாழுதல் என்பது தன்னில் தானே பரலோகத்தில் ஒரு இல்லத்தை உத்தரவாதப்படுத்துகிறது என்று நம்புபவர்களை உள்ளடக்கியிருக்கிறது. விசுவாசமில்லாத கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக உள்ளனர், ஏனெனில் அவர்கள் தங்களின் தேவபக்தியற்ற தன்மை மற்றும் மனம் வருந்தாத நிலை ஆகியவற்றின் விளைவாக, "தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகின்றனர்" (எபிரெயர் 6:6). சிலுவைக்குப் பகைஞர்களாக இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள், தாங்கள் சிலுவைக்குப் பகைஞர்களாக இருப்பதை *உரிமைகோருவதில்லை;* அவர்கள் அனேகமாகத் தாங்கள் அவ்வாறு இருப்பதை அறிந்துகூட இருப்பது இல்லை. இருந்தபோதிலும், அவர்களின் போதனை மற்றும்/அல்லது அவர்கள் வாழ்வு ஆகியவற்றினால் அவர்கள், சிலுவை சுட்டிக் காண்பிப்பவற்றிற்குப் பகைஞர்களாக இருக்கின்றனர்.

"அழிவு" என்பதே அவிசுவாசிகளுக்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் முடிவாக உள்ளது. "அழிவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை (இது *apoleia* என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது), முன்னதாகப் புறதெய்வ வணக்கக்காரர்களாக இருந்துகொண்டு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது (1:28); இங்கு இது தேவபக்தியற்ற கிறிஸ்தவர்களின் முடிவைக் குறிக்கிறது. இந்தச் சொற்றொடர், துன்மார்க்கருக்கு வரும் நித்திய தண்டனையைக் குறிக்கிறது (காண்க மத்தேயு 7:13; 2 பேதுரு 3:7; வெளிப்படுத்தின விசேஷம் 17:8, 11).[9] CEV வேதாகமத்தில் "... அவர்கள் நரகம் நோக்கிச் செல்கின்றனர்" என்றுள்ளது!

பவுலின் அடுத்த சொற்றொடரானது, கருத்தை இன்னும் நெருக்கமாக வலியுறுத்துகிறது: "அவர்களுடைய தேவன் வயிறு." ஏதேனும் ஒன்றை ஒருவர் தமது "தேவனாக" கொண்டிருத்தல் என்பது, அந்த விஷயம் (அது எதுவாக இருந்தாலும்) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும், அது அவரது வாழ்வைக் கட்டுப்படுத்துகிறது என்றும் அர்த்தப்படுகிறது. NASB ஆங்கில வேதாகமத்தில் இங்குள்ள "பசி" என்ற வார்த்தைக்குப் பதிலாகக் கிரேக்க வசனத்தில் "வயிறு" என்று அர்த்தப்படும் வார்த்தை உள்ளது. [தமிழ் வேதாகமத்திலும் இது "வயிறு" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] பவுலின் வெளிப்படையான கண்டனம், உணவிற்கு அடிமையாகுதலை (மீதூண் விருப்பம், போஜனப் பிரியம்; காண்க உபாகமம் 21:20; நீதிமொழிகள் 23:21; 28:7; தீத்து 1:12) அல்லது (மது, போதைப்பொருட்கள் மற்றும் இவை போன்ற) வேறு எதற்காவது அடிமையாகுதலை உள்ளடக்குவதாக இருக்கும். அவரது வார்த்தைகள் சட்டவிரோதமான பாலுறவு உட்பட, பொதுவாக மாம்ச இச்சைகள் யாவற்றையும் குறிப்பவையாக இருக்கவும் முடியும்.[10] NCV வேதாகமத்தில் "அவர்கள் தங்கள் சரீரங்கள் விரும்பும் எல்லாவற்றையும் செய்கின்றனர்" என்றுள்ளது. அப்போஸ்தலரின் குற்றஞ்சாட்டுதல் இன்னும் விரிவாக்கப்படக்கூட முடியும். ரோமர் 16:17, 18ல் சபையில் பிரிவினைகள் ஏற்படக்காரணமாக இருந்த கள்ளப்போதகர்களைப் பற்றி விவரிக்க இதேபோன்ற

*சொற்றொடராக்கம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வசனப் பகுதியில், ஒருவர் தமது தனிப்பட்ட விருப்பங்களை எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமானதாக ஏற்படுத்துதல் பற்றிய குறிப்பு காணப்படுவதாகத் தோன்றுகிறது. சுயத்தை மையமாகக் கொண்டிருத்தல் என்பது நம்மில் ஒவ்வொருவருக்கும் இன்றைய நாளில்கூட சோதனையாக உள்ளது!*

*பவுலின் அடுத்த விவரிப்பானது, இன்றைய நாட்களுக்கு வழக்கத்தைவிட மாறாக ஏற்புடையதாகக் காணப்படுகிறது: "அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே." இதில் "மகிமை" என்பதற்குப் பதிலியாக அதிகம் பொதுவாகப் பயன்படுத்தப்படும் "தற்பெருமை" என்பதை இடுங்கள், சித்தரிக்கப்படும் சூழ்நிலை இப்போது இன்னும் அதிக தெளிவாக உள்ளது. அவர்கள் "தாங்கள் செய்கிற அருவருப்பான விஷயங்களைப் பற்றித் தற்பெருமை கொள்கின்றனர்" என்று CEVவேதாகமம் கூறுகிறது. என் மனதில் உதாரணத்திற்குப் பின் உதாரணமாகப் பெருக்கெடுக்கிறது:[11]*

- *பாலுறவில் தவறான செய்கைகளைப் பற்றி வீண்பெருமை பேசும் மனிதர்கள்.*
- *முந்திய இரவில் எவ்வளவாகக் குடித்து அல்லது போதைப் பொருட்களைப் பயன்படுத்தி இருந்ததாக வீண்பெருமை பேசும் இளைஞர்கள்.*
- *தங்கள் நண்பர்களிடமிருந்து வியாபார நடவடிக்கைகளில் எவ்வாறு "தங்களால் முடிந்த அளவு மிகச் சிறப்பான" வருவாயைப் பெற்றோம் (அதாவது, ஏமாற்றினோம்) என்று வீண்பெருமை பேசும் வயது வந்த மனிதர்கள்.*
- *துன்மார்க்கத்தைத் தாங்கள் "சகித்துக்கொள்ளுதல்" பற்றி வீண்பெருமை பேசுவோர் (காண்க 1 கொரிந்தியர் 5:2).*
- *ஆபாசத்தையும் தேவதூஷணத்தையும் வெட்கமில்லாமல் பயன்படுத்தும் அல்லது நிர்வாணத்தையும் வேசித்தனம் மற்றும் விபசாரம் போன்ற செயல்களையும் சித்தரிக்கும் புத்தகங்கள், நாடகங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள்.*

*எனக்கு எரேமியா 6:15 நினைவுக்கு வருகிறது: "அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்." ஏசாயா 5:20ம் கூட ஏற்புடையதாகக் காணப்படுகிறது: "தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!" தாமஸ் மேன்ட்டன் என்பவர், "விழுந்து போன மனிதர் ... தலைகீழாக மாறிய மனிதராயிருக்கிறார்; அவரது வெறுப்பு எங்கிருக்க வேண்டுமோ அங்கே அவரது அன்பு இருக்கிறது," மற்றும் அவரது அன்பு எங்கிருக்க வேண்டுமோ அங்கே அவரது வெறுப்பு இருக்கிறது, மற்றும் அவரது மகிமை எங்கிருக்க வேண்டுமோ அங்கே அவரது வெட்கக்கேடு இருக்கிறது, எங்கே அவரது வெட்கக்கேடு இருக்க வேண்டுமோ அங்கே அவரது மகிமை இருக்கிறது" என்று எழுதினார்.[12]*

*நமது வசனப்பகுதியில் நாம் முன்னோக்கிக் கடந்து செல்லுகையில்,*

19ம் வசனத்தின் முடிவில் நாம், பிரச்சனையின் இருதயம் போன்ற மையப்பகுதிக்கு வருகிறோம்: பவுலினால் கண்டனம் பண்ணப்பட்டவர்கள் "பூமிக்கடுத்தவைகளைச் சிந்தித்தார்கள்." LB வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "இங்கு பூமியின் மீது இந்த வாழ்வைப் பற்றி மாத்திரமே அவர்கள் சிந்திக்கின்றனர்." சார்லஸ் ஏர்டுமேன் என்பவர், "அவர்களின் தொடுவானம் காலம் மற்றும் உணர்வுகளின் விஷயங்களுடன் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது" என்று எழுதினார்.[13] அவர்களின் மனஅமைவு பின்வருவது போன்று தொகுத்துரைக்கப்படலாம்: நரகத்திற்கு *நியமிக்கப்பட்டவர்களாகவும்* தங்கள் இச்சைகளினால் *இயக்கப்பட்டவர்களாகவும்* அவர்கள் இந்த உலகத்திற்குத் தங்களை *அர்ப்பணித்தவர்களாக* நிலைத்துள்ளனர்.[14]

முன்னரே உரைக்கப்பட்டபடி, பூமிக்குரிய விஷயங்களில் கட்டிவைக்கப் பட்டிருந்த இந்த மனிதர்கள் யார் என்பதை நாம் அறிவதில்லை, ஆனால் அவர்கள் பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்களிடத்தில் செல்வாக்குச் செலுத்த முடியும் என்று பவுல் அறிந்திருந்தார். அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்த தனிநபர்களாக இல்லாதிருந்தால் பவுல் கவலைப் பட்டிருக்கமாட்டார். அனேகமாக அவர்கள், வசீகரமான ஆளுமைத்தன்மையும் நம்பி இணங்க வைக்கும் வழிகளும் கொண்டவர்களாக இருந்திருப்பார்கள். இன்றைய நாட்களில் பேச்சாளர்களின் ஒரு படையானது பூமிக்குரிய விஷயங்களின் முக்கியத்துவத்துவம் பற்றி வானளவாகப் புகழ்கிறது. இந்தப் "படையில்" நமது நாட்களின் மிகவும் வெற்றிகரமாக மற்றும் வசீகரமான மக்கள் உள்ளடங்கி இருக்கின்றனர்: நடிகர்கள், நடிகைகள், மிகச்சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களின் எழுத்தாளர்கள், உலகளவில் அறியப்பட்டு இருக்கும் விளையாட்டு வீரர்கள், புகழ்பெற்ற இசையமைப்பாளர்கள், மற்றும் பாடகர்கள், புகழ்பெற்ற அரசியல் வாதிகள் ... இன்னும் இந்தப் பட்டியல் நீண்டுகொண்டுள்ளது. இதில் நண்பர்கள், அயலகத்தவர்கள் அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் கூட உள்ளடங்கி இருக்கலாம். அவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தங்கள் செய்தியில் ஒரு பொதுவான நூலை [கொள்கையை]க் கொண்டுள்ளனர்: "*இந்த* உலகமே முக்கியத்துவம் வாய்ந்தது." பூமிக்குரிய விஷயங்கள் நமது சிந்தனைகளில் ஆதிக்கம் செலுத்தும்படி அவற்றை அனுமதித்தல் என்பது நாம் யாவரும் எதிர்கொள்ளும் ஒரு அபாயமாக உள்ளது. "இந்த உலகத்தில் இருந்து கொண்டு" ஆனால் "உலகத்தாராக" இராதிருத்தல் என்பது எவ்வளவு கடினமானதாக உள்ளது!

பூமிக்குரிய விஷயங்களில் பிரியமாயிருப்பவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று நாம் செயல்படக் கூடாது. இதற்கு நேர்மாறாக நாம் - காணப்படாதவற்றைக் காணக்கூடியவராக இருந்த ஆபிரகாம் போன்று - வானத்திற்குரிய விஷயங்களில் தங்கள் கண்ணோக்கங்களை அமைத்திருப்பவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று நாம் செயல்பட வேண்டும்: "விசுவாசத்தினாலே ஆபிரகாம் ... வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, ... ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்" (எபிரெயர் 11:8-10).

## சாதிக்க வேண்டிய ஒரு நோக்கம் (3:20-4:1)

*பவுல் தமது வாசகர்களுக்காகக் கொண்டிருந்த விருப்பம், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் கூறிய பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொகுத்துரைக்கப்பட முடியும்: "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2அ). கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் அவர் இதே போன்ற சிந்தனையொன்றை முன்னிறுத்தினார்: "பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோசெயர் 3:2). கொலோசெயர் 3:2ஐ பிலிப்ஸ் என்பவர் பின்வருமாறு மொழிபெயர்த்தார்: "பூமிக்குரிய கடந்துபோய்விடும் விஷயங்களுக்கல்ல, ஆனால் பரலோகத்தின் விஷயங்களுக்கு உங்கள் இருதயத்தைக் கொடுங்கள்."*

### பரலோகம் சார்ந்த ஒரு இடம்

*பரலோகத்து இடம் என்பது அவர்கள் தங்கள் சிந்தையை அமைக்க வேண்டிய பரலோகத்திற்குரிய விஷயங்களில் ஒன்றாக இருந்தது. பவுல், மோசமான உதாரணங்கள் பற்றிப் பிலிப்பியர்களை எச்சரித்த பின்பு, 3:17ல் இருந்த சிந்தனை வரிசையை மீண்டும் தொடர்ந்தார்.[15] அவர் "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" என்று எழுதினார் (3:20அ).[16] "குடியிருப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (politeuma என்பதன் ஒரு வடிவமாக) கிரேக்க வார்த்தை, 1:27ல் "நடந்துகொள்ளுங்கள்" என்று தரவழைக்கப்பட்ட வினைச்சொல்லின் பெயர்ச்சொல் வடிவமாக உள்ளது. முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, மொஃப்பாட் என்பவரின் மொழிபெயர்ப்பில் 3:20 "நாம் பரலோகக் காலனிவாசிகளாக இருக்கிறோம்" என்றுள்ளது. இந்த உருவகம் பிலிப்பியர்களுக்கு விசேஷித்த அர்த்தம் கொண்டிருந்தது, ஏனென்றால் பிலிப்பி நகரமானது ரோமக்குடியேற்ற [காலனி] நகராக இருந்தது. ரோமர்களின் காலனி [குடியேற்ற நகரம்] குறிப்பிட்ட சில தனிச்சலுகைகளைக் கொண்டிருந்தது, ஆனால் அதற்கு இணையான பொறுப்புகளையும் கொண்டிருந்தது. ரோமர்களின் காலனியில் உள்ள குடிமக்கள் ரோமாபுரியின் மீது தேசப்பற்று கொண்டிருக்கக் கடன்பட்டிருந்தனர். அவர்களின் நடக்கை அதன் சட்டங்களால் ஆளப்பட்டது, மற்றும் அதன் மகிமையிலேயே அவர்களின் நம்பிக்கை மையங்கொண்டிருந்தது. மற்றும் அவர்கள் காலனி ஆதிக்கம் செய்ய - ரோமச் சிந்தனைகளையும் கலாச்சாரத்தையும் பரப்ப - வேண்டும் என்று எதிர் பார்க்கப்பட்டனர்.*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், இந்த உலகத்தைப் பொறுத்த மட்டில் "தங்கியிருக்கும் அந்நியர்களாக" (வேறு நாட்டில் குடியிருக்கும் ஒரு நாட்டுக் குடிமக்கள்) இருக்கிறோம், அதாவது நாம் "பூமியின்மேல் அந்நியரும் பரதேசிகளும்" என்ற நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்தறிவது அவசியமாக உள்ளது (எபிரெயர் 11:13; காண்க 1 பேதுரு 2:11). நமது பெயர்கள் பரலோகத்தில் உள்ள "ஜீவ புத்தகத்தில்" குடிமக்கள் என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன (காண்க பிலிப்பியர் 4:3; எபிரெயர் 12:23). இந்த உலகம் நமக்கு ஒரு "தற்காலிக முகவரியாக" மாத்திரமே உள்ளது; பரலோகமே நமது "நிரந்தர முகவரியாக" உள்ளது. ரோமர்களின் காலனியில் இருந்த குடிமக்களைப் போன்றே, நாம் குறிப்பிட்ட சில தனிச்சலுகைகளைக் கொண்டிருக்கிறோம், ஆனால் அதற்கு இணையான பொறுப்புக்களையும்*

கொண்டிருக்கிறோம். நாம் நமது பரலோக பிதாவின் மீது நமது பற்றைக் கொண்டிருக்கக் கடன் பட்டு இருக்கிறோம். நாம் அவரது பிரமாணங்களினால் ஆளுகை செய்யப்படுகிறோம் மற்றும் நமது நம்பிக்கை அவரது மகிமையையே மையங்கொண்டுள்ளது - மற்றும் நாம் கிறிஸ்தவ சத்தியங்களைப் பரப்பும்படி எதிர்பார்க்கப்படுகிறோம்.

## பரலோகம் சார்ந்த ஒரு நபர்

பிலிப்பியர்கள் தங்கள் சிந்தைகளைப் பரலோகம் சார்ந்த ஒரு நபர்மீது அமைக்க வேண்டும் என்றும் பவுல் விரும்பினார். தொடர்ந்து அவர், "அங்கேயிருந்து [பரலோகத்திலிருந்து] கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று எழுதினார் (3:20ஆ). பவுல் கடைசியாகத் தாம், கிறிஸ்துவை முழுமையாக அறியக்கூடும்படிக்கு கடைசி நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததாக ஏற்கனவே சுட்டிக் காண்பித்திருந்தார் (3:10, 11). அலெக் மோட்யெர் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> நாம் பல விஷயங்களை நன்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம்: கடைசியில் பாவம் மற்றும் சோதனை ஆகியவற்றின் முன்னிலையில் இருந்துகூட விடுதலை; மாபெரும் பழம் மனிதர்களை - ஆபிரகாம், ஏசாயா, பவுலையும்கூட - சந்தித்தல்; பூமியின் மீது நாம் அறிந்திருந்த நமக்கு அன்பானவர்களுடன் மறுபடி ஒன்றித்தல்; பரலோக இடங்களின் மகிமை. ஆம் இந்த விஷயங்கள் யாவையும் உண்மையே, ஆனால் இவைகளுக்கு அப்பால் *மீட்பரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து* என்ற ஒருவரின் பிரசன்னமானது பரலோகத்தின் இசைவிணைப்பையும் அர்த்தத்தையும் கவனக்குவிப்பையும் சித்தரிக்கும், அந்த நபரின் மூலமாக மாத்திரமே இந்த மாபெரும் கூட்டம் ஒன்றுகூட்டப்படுகிறது. அவருக்கு மாத்திரமே மகிமை ஏறெடுக்கப்படுகிறது ... இன்னொரு இடத்தில் பவுல், "இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" என்று எழுதினார்.[17]

கிறிஸ்து தமது மரணத்திற்கு முன்பு, தமது சீஷர்களுடன் இருந்த கடைசி மணிகளின்போது, அவர் திரும்ப வருவதாக வாக்குறுதி அளித்தார் (யோவான் 14:1-4). அவர் பரத்துக்கேறியபோது, அதைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களிடத்தில் தூதர்கள், "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று கூறினர் (நடபடிகள் 1:11). தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், கர்த்தர் எந்த வேளையிலும் வரக்கூடும் என்று உணர்ந்தறிந்தவர்களாக, எதிர்பார்ப்பின் நிலையில் வாழ்ந்தனர் (காண்க 1 தெசலோனிக்கேயர் 4:13-5:2; தீத்து 2:13; எபிரெயர் 9:28). இரண்டாம் வருகை அவர்களின் வாழ்விற்கு அர்த்தம் கொடுத்தது. கிறிஸ்துவின் மறுவருகையில் அவர்கள் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கை, அவர்களின் அன்றாடப் பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் உபத்திரவத்தின்போது அவர்களை நிலைநிறுத்தவும் உதவியது.

ஒரு இரட்சகர் வர ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று எழுதியபோது பவுல் எதையும் மிகைப்படுத்திக் கூறவில்லை. கிரேக்க

வசனத்தில் ''எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்'' என்பது *apekdechomai* என்ற வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. இது (*apo* மற்றும் *ek* என்ற) இரண்டு முன்னிடைச் சொற்களை, ''பெற்றுக்கொள்ள'' என்று அர்த்தப்படும் (*dechomai* என்ற) வார்த்தையுடன் இணைத்துக் பெற்ற ஒரு கூட்டு வார்த்தையாக உள்ளது. இது ''[புதிய ஏற்பாட்டில்] எட்டு முறைகள் வருகிறது, அவற்றில் ஆறுமுறைகள் இது பவுலினால் பயன்படுத்தப்பட்டுள்ளது ... இது அவருடைய சிறப்பு வார்த்தையாக உள்ளது, இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காகக் கிறிஸ்தவரின் இடைவிடாத ஏக்கம், அவரது சந்தோஷமான எதிர்பார்ப்பு மற்றும் அவரது ஊக்கமான விருப்பம் ஆகியவற்றை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தும் வார்த்தையாக அவருக்கு [பவுலுக்கு] உள்ளது.''[18]

பிலிப்பியர் 3:20ல் ''இரட்சகர்'' என்ற வார்த்தை உள்ளடக்கப் பட்டிருத்தல் தனிச்சிறப்பானதாக உள்ளது. இந்தச் சொற்றொடரைப் பவுல் அடிக்கடி பயன்படுத்தியதில்லை, ஆனால் இங்கு அவர் இதைப் பயன்படுத்தினார் - இந்த வார்த்தை, கர்த்தர் திரும்ப வரும்போது தமது மக்கள் மீது கொண்டுள்ள பணிப்பொறுப்பை மிகச்சிறப்பாகச் சித்தரிப்பதால் அவர்கள் இதை இங்கு பயன்படுத்தி இருக்கலாம். தேவபக்தியற்றவர்களுக்கு அவர் ஒரு நியாயாதிபதியாக மாத்திரமே தோன்றுவார். ஆனால் தமக்குச் சொந்தமானவர்தளுக்கு அவர் ஒரு இரட்சகராக - பாவம் நிறைந்த இந்த உலகத்தில் இருந்து அவர்களை விடுவிக்க, அவர்களைக் தற்காக்க மற்றும் நித்தியம் முழுவதிலும் அவர்கள் தம்மோடு இருக்கும்படி அவர்களை அழைத்துச் செல்ல - வருவார்.

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களைப் போன்று நாமும் இயேசுவின் மீது நமது இருதயங்களைக் கவனம்குவித்து அவரது வருகைக்காக ''எதிர்பார்த்துக் கொண்டிருத்தல்'' அவசியமாக உள்ளது. அவர்களைப் போன்று நாமும், அவர் எந்த வேளையிலும் வரக்கூடும் என்பதை உணர்ந்து அறிய வேண்டும். அவர்களைப் போன்று நாமும், ''ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்'' என்று ஜெபிக்க வேண்டும் (வெளிப்படுத்தின விசேஷம் 22:20)!

## பரலோகம் சார்ந்த ஒரு நோக்கம்

கர்த்தர் மறுபடியும் வரும்போது, திகைப்புக்குரிய விஷயங்கள் நடைபெறும். நாம் யாவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக ஒன்றுகூடுவோம் (மத்தேயு 25:31, 32). [அவரது] வலது புறத்தில் நிற்பவர்கள் பரலோகம் செல்ல, அவரது இடது புறத்தில் நிற்பவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் (மத்தேயு 25:34, 41, 46). இருப்பினும் பவுலுக்கு - ஒவ்வொருநாளும் பலவீனமாகிக் கொண்டிருந்த உடலைக் கொண்டிருந்த வயது முதிர்ந்த பவுலுக்கு - சரீரத்தின் மீட்பு என்பது மிகவும் பரவசத்திற்குரிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருந்திருக்கும். அவர், ''கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து ... நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்'' என்று கூறினார் (பிலிப்பியர் 3:20ஆ, 21ஆ).

''நம்முடைய அற்பமான சரீரத்தை''[19] என்பது நாம் இப்போது குடியிருக்கும் பௌதீக சரீரங்களை - படிப்படியாக அழியக்கூடிய, வியாதிப்படக்கூடிய, உருவழியக்கூடிய, மரணம் அடையக்கூடிய, சிதைவடையக்கூடிய சரீரங்களை - குறிக்கிறது. அவோன் மலோன் என்பவர் இந்த உடல்களைத் பற்றி விரிவாகச் சித்தரித்தார்: ''வரம்புகளினால் பூட்டப்பட்டுள்ள, பலக்குறைவினால்

தடைப்பட்ட, வேதனையினால் துரத்தப்பட்ட மற்றும் மரிப்பதற்கு நியமிக்கப்பட்ட உடல்.''[20] "தம்முடைய மகிமையான சரீரம்'' என்பது பரலோகத்தில் உள்ள இயேசுவின் ஆவிக்குரிய சரீரத்தைக் குறிக்கிறது. இயேசுவின் "மகிமையான சரீரம்'' என்பது, விசுவாசிகள் மரித்தோரில் இருந்து எழுப்பப்படும்போது பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய சரீரங்களின் மூலமுன்மாதிரியாக உள்ளது.

"ஒப்பாக" மற்றும் "மறுரூபப்படுத்துவார்" என்ற வார்த்தைகள் மாற்றத்தின் முழுமைத்தன்மையை வலியுறுத்துகின்றன. "மறுரூபப்படுத்துதல்" என்பதற்கான (*metaschematisei* என்ற), கிரேக்க வார்த்தை *schema* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்திற்கு முன்னதாக *meta* ("மத்தியில்'') என்ற முன்னிடைச் சொல்லை இட்டுப்பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. "ஒப்பாக'' (*summorphon*) என்று தரவழைக்கப்பட்டுள்ள வார்த்தை, *morphe* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்திற்கு முன்னதாக *sun* ("உடன்'') என்ற முன்னிடைச் சொல்லை இட்டுப்பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. *Schema* என்பது ஒரு நபரின் அல்லது ஒரு பொருளின், மாறக்கூடிய மற்றும் மாறுகிற வெளிப்புறத் தோற்றத்தைக் குறிக்கையில், *morphe* என்பது மாறாதிருக்கும் அத்தியாவசிய இயல்பைக் குறிக்கிறது என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம். கர்த்தர் திரும்ப வரும்போது, நமது சரீரங்களின் புறம்பான தோற்றமும் அவற்றின் அத்தியாவசியமான இயல்பும் ஆகிய இரண்டுமே மாறும். "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' (1 யோவான் 3:2)!

நான் இதை அல்லது இது எவ்வாறு நடைபெறும் என்பதைப் புரிந்துகொள்கிறேனா? இல்லை, ஆனால் இதை நான் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்கிறேன். எர்டுமேன் என்பவர் "இவ்வார்த்தைகள் அறிவதற்கான நமது ஆர்வத்தைத் திருப்திப்படுத்தப் போதுமானவையாக இருப்பதில்லை, ஆனால் இவைகள் ஆறுதலை ஏவுதலுக்கும் நம்பிக்கையைத் தூண்டுவதற்கும் போதுமானவையாக இருக்கலாம்'' என்று எழுதினார்.[21] பிலிப்பியர் 3:20ன் முதல்பாகத்திற்கு, 1 கொரிந்தியர் 15ல் பவுல் எழுதியது அனேகமாக மிகச்சிறந்த விளக்கவுரையாக இருக்கலாம்:

> ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தி யீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார் ...
>
> மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம்

> *விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு … இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்தியரையடை [மரணமடை] வதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறு ரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? … நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரிந்தியர் 15:35-57).*

*கையில் உள்ள பாடக்கருத்திற்கு நடைமுறைப் பயன்பாடு தெளிவானதாக உள்ளது: மாம்சம் மாறப்போகிறதாக இருக்கும்போது நீங்கள் மாம்சத்தின் மீது உங்கள் கவனத்தை மையப்படுத்த வேண்டியது என்ன? உங்கள் இருதயம் பரலோகம் சார்ந்த ஒரு நோக்கத்தின் மீது அமைக்கப்பட வேண்டும்: உங்கள் "அற்பமான சரீரம்" மறுரூபமாகுதல் (பிலிப்பியர் 3:20).*

## பரலோகம் சார்ந்த ஒரு வல்லமை

*சித்தரிக்கப்பட்டுள்ள ஆச்சரியப்படத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக் கிறிஸ்து வல்லவராக இருக்கிறாரா? அவர் அவ்வாறே இருக்கிறார் - அவர் அதை "எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே" செய்வார் (3:21அ) என்று பவுல் தமது வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார். இது வல்லமை பொதியப்பட்ட கூற்றாக உள்ளது. "செயலின்படியே" என்பது* "energy" *என்ற ஆங்கில வார்த்தைக்கு மூலமான energeian என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* "Energeia" *"என்பது வெறும் 'வல்லமை'யாக மாத்திரமல்ல, ஆனால் செயல்பாட்டில் உள்ள வல்லமை'யாக, 'இயக்கத்தில் உள்ள வல்லமையாக' 'வேலைசெய்தலில் உள்ள வல்லமை' யாக இருக்கிறது."[22] 3:21ல் "வல்லமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* dunasthai *என்ற கிரேக்கச் சொற்றொடரில் இருந்தே நாம் வலிமை நிறைந்த வெடிப்பொருளுக்குரிய* "dynamite," *என்ற பெயரைப் பெறுகிறோம்.*

*இயேசு எவ்வளவு "வல்லமை" கொண்டுள்ளார்? அவர் "சகல அதிகாரமும்" கொண்டுள்ளார் (மத்தேயு 28:18). "எல்லாம் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளன" (எபேசியர் 1:22; காண்க 1 கொரிந்தியர் 15:27அ). அவர் "சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்" இருக்கிறார் (எபிரெயர் 1:3). அவரது "வல்லமை … உலகளாவியதாகவும் முழுமையானதாகவும் உள்ளது."[23] "சகலத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க" இயேசுவின் வல்லமையானது (பிலிப்பியர் 3:21), அவர் நம்மை மரித்தோரில் இருந்து எழுப்பவும், அழிந்துபோகும்*

மாம்சப்பிரகாரமான உடல்களை அழியாமையுள்ள ஆவிக்குரிய உடல்களாக மாற்றவும் வல்லமை கொண்டிருக்கிறார் என்பதற்குத் தேவனுடைய உத்தரவாதமாக உள்ளது! இங்கு நமது சிந்தைகளுக்கு இன்னொரு கவனக்குவிப்பு உள்ளது: அவரது பரலோகம் சார்ந்த வல்லமை.

## பரலோகம் சார்ந்த ஒரு ஆணை

பவுலின் பரலோகம் சார்ந்த வலியுறுத்தம் 4ம் அதிகாரத்தின் முதல் வசனம் வரையிலும் தொடர்கிறது: "ஆதலால், எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கீரிடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்." இந்த வசனம் "ஆதலால்" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது, இது 3ம் அதிகாரத்தின் கடைசி வசனங்களுடன் இவ்வசனத்தைப் பிணைப்பதாக உள்ளது. அடுத்த பாடத்தில் நாம் 4:1ஐ மறுபடியும் கண்ணோக்குவோம், ஆனால் ஒருசில திறவுகோல் வார்த்தைகளை முக்கியத்துவப்படுத்துவதைக் கொண்டு இந்தப் பாடத்தை நான் முடிக்க விரும்புகிறேன்.

"இந்தப்படியே" என்பது பவுலினால் வரைகுறிப்பிடப்பட்ட ஆவிக்குரிய பாதைவழியைக் குறிக்கிறது: ஒருவர் தமது நினைவில் கிறிஸ்துவை முதலாவதாக வைக்கும் பாதைவழி; கடந்த காலத்தை விட்டு விட்டு முன்வைக்கப்பட்டிருக்கும் இலக்கைத் தொடரும் பாதைவழி; ஒருவர் பூமிக்குரிய விஷயங்கள் மீதல்ல ஆனால் மேலான விஷயங்கள் மீது கவனம் குவிக்கும் பாதைவழி.

''இந்தப்படியே'' என்பது பற்றிப் பவுல், தமது வாசகர்கள் "நிலைத்திருக்க" வேண்டும் என்று விரும்பினார். "நிலைத்திருங்கள்" என்பது *steko* என்ற வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது அஞ்சிவிலகாமல் பின்வாங்கிப்போகாமல், ஒரு போர்வீரரைப் போன்று யுத்தத்தின் மத்தியில் - அசையாது அசைக்கப்படாது - நிற்பதை அர்த்தப்படுத்துகிறது (காண்க எபேசியர் 6:10-17). கிறிஸ்தவர்கள் பலமடங்கு அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர்: உலகத்தின் இழுப்பும் மாம்சத்தின் இச்சையும் (ரோமர் 12:2; 1 யோவான் 2:16), புதிதும் புதுமையானதுமான கள்ளப் போதகத்தின் கவர்ச்சி (நடபடிகள் 20:30; 2 தீமோத்தேயு 4:3) மற்றும் துன்புறுத்தப்படுதலின் அச்சுறுத்தல் (2 தீமோத்தேயு 3:12). இவையாவற்றிற்கும் எதிராகப் பவுல், "நிலைத்திருங்கள்!" என்று புத்திகூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ''கொலையே செய்யப்படுவோம் என்றாலும்கூட அதையும் பொருட்படுத்தாது உங்கள் இடத்தில் நிலையாக நில்லுங்கள்!'' நாம் "உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும்" இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 15:58)!

நாம் இதைச் செய்யக்கூடியவர்களாக ஆக்குவது எது? ''நிலைத்திருங்கள்'' என்ற வார்த்தைக்கு முன்னர் ''கர்த்தருக்குள்'' என்ற சொற்றொடர் உள்ளது. இது "அவரது அதிகாரத்திற்கு மனவிருப்பமாகக் கீழ்ப்படிதல்'' என்பதில் "நிலைத்திருத்தல்'' என்று அர்த்தப்பட முடியும்.[24] துரதிர்ஷ்டவசமாகச் சிலர், கர்த்தருடைய வழியில் நிலைநிற்பதற்குப் பதிலாக, தவறிலும் முரட்டாட்டமான கலகத்திலும் "நிலைநிற்கின்றனர்." இருப்பினும் இவ்வசனப் பகுதியில் "கர்த்தருக்குள்" என்பது அனேகமாக நாம் "கர்த்தருடைய *பலத்தில்*" நிலைநிற்க வேண்டும் என்று அர்த்தப்படலாம். நமது ஆவிக்குரிய

யுத்தம் பற்றிப் பவுல், எபேசியருக்கு எழுதிய போது, "கர்த்தரிலும் *அவருடைய* சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" என்று கூறினார் (எபேசியர் 6:10; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "ஒன்று நாம் 'கர்த்தருக்குள்' நிலைநிற்கிறோம் அல்லது நாம் நிலைநிற்பதே இல்லை" என்று கூறப்பட்டுள்ளது. மேலான விஷயங்களின் மீது நமது சிந்தைகளை அமைத்து வைத்தல் என்பது கர்த்தருடைய பலத்தில் நிலைநிற்பதற்கான ஒரு வழியாக உள்ளது.

## முடிவுரை

மீண்டுமாக, உங்களைச் சுற்றிலும் உள்ள எல்லாப் பொருட்களையும் கண்ணோக்குவதற்குச் சற்று நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பின்பு உங்களுக்கு நீங்களே, "இவையாவும் அழிவை நோக்கிச் செல்பவையாக உள்ளன" என்று கூறிக்கொள்ளுங்கள் (காண்க கொலோசெயர் 2:22). பவுலின் வார்த்தைகளைத் திரும்பவும் கூறுங்கள்: "ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரிந்தியர் 4:18). அதனால் தான் இயேசு, "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம் ... பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்" என்று கூறினார் (மத்தேயு 6:19, 20அ). இந்தச் சிந்தனை, நீண்ட நாட்களுக்கு முன்னர் நான் மனப்பாடம் செய்திருந்த, யாரோ ஒருவர் எழுதிய பாடலின் பின்வரும் பல்லவி வரிகளால் நன்கு விளக்கி உரைக்கப்படுகிறது:

ஒரே ஒரு வாழ்க்கை
விரைவில் கடந்துபோகும்;
தேவனுக்காகச் செய்தவைகளே
கடைசிவரை நிலைத்திருக்கும்.

அப்படியென்றால் நாம் நமது சிந்தனைகளை எங்கே வைக்க வேண்டும்? விரைவில் அழிந்துவிடக் கூடிய பூமிக்குரிய பொருட்களின் மீதா அல்லது என்றைக்கும் அழியாது இருக்கக் கூடிய பரலோகம் சார்ந்த விஷயங்களின் மீதா? தேர்ந்துகொள்ளுதல் என்பது சுலபமான ஒன்றாக உள்ளது. (நான் வாழும் இடத்தில், இந்தத் தேர்ந்து கொள்ளுதலை நாங்கள், "மூளை தேவைப்படாத ஒன்று" என்று அழைப்பது உண்டு; இதற்குத் சிந்தனை எதுவும் தேவைப்படுவதில்லை.) நாம் பூமியில் அஸ்திபாரம் கொண்டவர்களாக இருக்கலாம், ஆனால் நாம் பரலோகத்தினால் கட்டப்பட்டவர்களாக இருக்கும்படி தீர்மானம் செய்வோமாக!

---

குறிப்புகள்

[1]James M. Tolle, *Notes on Philippians* (San Fernando, Calif.: Tolle Publications, 1972), 59. (Emphasis mine.) [2]கூட்டு வார்த்தைகளில், *sun* என்பது பல்வேறு வகைகளில் எழுத்துக்களைக் கொண்டிருக்கக் கூடும். இங்கு அது *sum* என்பதாக உள்ளது. [3]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 715. KJV வேதாகமத்தில் "mark" என்ற வார்த்தை உள்ளது. சிலர் "mark" என்ற வார்த்தையைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர், இதைப்

பற்றி அவர்கள், ஒரு தாளின் மீது (எழுத்தில்) ஒரு குறியை ஏற்படுத்துதல் என்ற வகையில் சிந்திக்கின்றனர். இதற்கு மாறாக இது பின்வரும் வாக்கியத்தில் உள்ள கருத்தமைவில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "எனது வார்த்தையைக் குறித்துக்கொள்." அதாவது, "எனது வார்த்தைகளுக்குக் கவனம் கொடுத்து அவற்றை நினைவில் வைத்துக்கொள்." [4]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary,* vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 159. [5]இந்த வாக்கியத்தையும் முந்திய வாக்கியத்தையும் நீங்கள் வாழும் இடத்திற்குத் தக்காற்போன்று தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [6]இந்தக் கள்ளப்போதகர்கள், வேறுபட்ட எழுத்தாளர்களால் பல்வேறு வகையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். ஒருவேளை அவர்கள், கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்ட கிருபையின் போதனையை பாவம் செய்வதற்கான உரிமை என்ற வகையில் போதித்து இருக்கலாம் (காண்க ரோமர் 6:1), அல்லது இது கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் (காண்க 1 யோவான் 2:3, 4) இருந்து விலக்களித்த, மேன்மை யான "அறிவை" உரிமைகோரிய அறிவுசார் இயக்கத்திற்கு முந்திய குழுவாக இருந்தி ருக்கலாம் (காண்க 1 தீமோத்தேயு 6:20). இந்த மனிதர்கள் "லிபர்த்தீனர்கள்" என்றும் அழைக்கப்பட்டிருந்தனர், இவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் சுயாதீனத்தைப் பாவம் செய்வதற்கு அனுமதியாக்கினர் (காண்க கலாத்தியர் 5:13). மிகச்சரியாக அடையாளம் கண்டறிதல் என்பது முக்கியமற்றது. 2 பேதுரு 2ம் அதிகாரம் இவ்வகையான போதகரைப் பற்றிய பொதுவான விவரிப்பைத் தருகிறது. [7]யூதர்கள் மற்றும் புறதெய்வ வணக்கப் போதகர்கள் ஆகிய இருதிறத்தாரும் பல்வேறு விளக்கவுரையாளர்களால் முன் மொழியப்பட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பான்மையானவர்கள், *கிறிஸ்தவக்* கள்ளப் போதகர்களையே பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று ஒப்புக் கொள்கின்றனர். பவுல் மிகவும் கலக்கம் அடைந்திருந்தார் ("அழுதார்") என்ற உண்மையானது, இவர்கள் தங்கள் சகோதரர்களைப் பாழாக்கும்படி வழிநடத்திய கிறிஸ்தவர்களாக இருந்தனர் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. [8]Vine, 1218. [9]துன்மார்க்கர் "அழிக்கப்படும்போது" அவர்கள் (இல்லாது ஒழியும்படி) நிர்மூலமாக்கப்படுகின்றனர் என்று சிலர் போதிக்கின்றனர், ஆனால் *apoleia* என்ற வார்த்தை, "இல்லாது ஒழிவதை அல்ல, ஆனால் நலமாயிருப்பதை இழத்தல்" என்பதையே சுட்டிக்காண்பிக்கிறது (Vine, 295). [10]"Belly" அல்லது "stomach" என்பவை, பாலுறவிற்கான உறுப்புகள் உட்பட, உடலின் கீழ்ப்பாகத்தைக் குறிப்பிடும் அமங்கலமான சொல்வழக்கு என்று ஒரு சில விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றனர். வேதவசன ரீதியான திருமணமே தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமணமாக உள்ளது (காண்க எபிரெயர் 13:4); மற்ற எல்லாப் பாலுறவுகளும் வேதாகமத்தினால் கண்டனம் பண்ணப்பட்டுள்ளது. ரோமர் 13:9; 1 கொரிந்தியர் 6:18 ஆகியவற்றைக் காணவும் (NASB வேதாகமம், "fornication" என்பதற்கான கிரேக்க வார்த்தையை வழக்கமாக "immorality" என்ற ஆங்கில வார்த்தையாகவே மொழிபெயர்க்கிறது).

[11]இதை, நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்றாற்போல் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். உதாரணங்கள் ஏறக்குறைய முடிவற்றவைகளாக உள்ளன. பண்பற்ற நடவடிக்கைகள் பற்றி வீண்பெருமை கொள்ளுபவர்கள், சூதாட்டத்தில் தாங்கள் எவ்வளவு தொகையை ஜெயித்தனர் என்பதை பற்றி வீண்பெருமை கொள்ளுபவர்கள், இன்னும் இன்னும் மற்ற உதாரணங்கள். [12]Quoted in John A. Knight, *Beacon Bible Expositions,* vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 108. [13]Charles R. Erdman, *The Epistle of Paul to the Philippians* (Grand Rapids, Mich.: Baker Book House, 1983), 128. [14]இந்தக் கருத்து, Charles R. Swindoll, *Laugh Again* (Dallas: Word Publishing, 1992), 166 என்னும் புத்தகத்திலிருந்து தழுவியமைக்கப்பட்டது. [15]19 மற்றும் 18 ஆகிய வசனங்கள், பவுலின்

*சிந்தனை வரிசையில் தொடர்பற்ற வகையிலான உட்செருகல் என்று நினைக்கப்பட முடியும். (*KJV *வேதாகமத்தில் இது அடைப்புக் குறிகளுக்குள் வருவதைக் கவனியுங்கள்.)* [16]*பிலிப்பியர் 3:20, 21ம் வசனங்கள் தொடக்க கால சபையாரால் ஒரு கீர்த்தனையாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று விளக்கவுரையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர், ஆனால் விஷயம் இவ்வாறு இருந்ததா என்று நமக்கு நிச்சயமாகத் தெரிவதில்லை.* [17]Alec Motyer, *The Message of Philippians: Jesus Our Joy,* The Bible Speaks Today series, ed. John R. W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1984), 196. His Scripture quotation is from 1 Thessalonians 4:17. [18]Hawthorne, 171. [19]*மூலவசனம் "நமது சிறுமையான சரீரம்" என்று அர்த்தப்படுகிறது. "சிறுமை" என்பது 2:3ல் உள்ள "மனத்தாழ்மை" மற்றும் 2:8ல் உள்ள "தாழ்த்தினார்" என்ற வார்த்தைகளுக்குரிய அதே கிரேக்க வேர்வார்த்தையில் இருந்து வந்துள்ளது.* KJV *வேதாகமத்தில், "மலிவான," "மதிப்பில்லாத" என்று அர்த்தப்படும் இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்த* "vile," *என்ற வார்த்தை உள்ளது.* [20]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 98.

[21]Erdman, 130. [22]Hawthorne, 173. [23]Richard B. Gaffin, notes on Philippians, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1808. [24]Vine, 1084.